தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
(with UGC 2(f) &12(B) status and NAAC Accredited with 'A' Grade in 1st Cycle)
Gangai amman Koil Street, Karapakkam, Chennai-600 097.
Website: www.tnteu.ac.in E-mail: registrar@tnteu.ac.in

**No.TNTEU/R/Admin/2025/ 00306** **Date: 18.02.2025**

**Dr.K.Rajasekaran, Ph.D.,** ***WEB POST***
Registrar i/c

பெறுநர்:

முதல்வர்கள் / செயலர்கள்,
இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

அய்யா / அம்மையீர்,

பொருள்:தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள் - பழங்குடியினர் நலம் - கல்வி உதவித் தொகை - 2024-2025 ஆம் ஆண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம் - கல்லூரிகள் பயிலும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கான இணைய வழியில் மாணவர் விண்ணப்பங்கள் பதிவு செய்தலுக்கான அறிவுரை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:ந.க.எண்.பமே/ஏ1/6891/2024 நாள்: 29.01.2025 பழங்குடியினர் நல இயக்குநரகம், சேப்பாக்கம், சென்னை–05.

-------------------------

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைவு பெற்றுள்ள கல்வியியல் கல்லூரிகள் தங்கள் கல்லூரிகளில் பயிலும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு இணையதளத்தில் பதிவு செய்வது குறித்த வழிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து கல்வியியல் கல்லூரிகளும் மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி இணையதளத்தில் பதிவு மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

18/2/25

பதிவாளர் (பொ)

இணைப்பு: பார்வையில் குறிப்பிட்டுள்ள ந.க.எண்.பமே/ஏ1/6891/2024, நாள்: 29.01.2025.

**Top Priority**

# பழங்குடியினர் நல இயக்குநரகம்

அனுப்புநர்
இயக்குநர்
பழங்குடியினர் நல இயக்குநரகம்
சேப்பாக்கம்,
சென்னை-05.

பெறுநர்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர் ,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண்.பமே/ஏ1/6891/2024 , நாள்: 29 .01.2025

அய்யா/அம்மையீர்,

பொருள்: பழங்குடியினர் நலம் - கல்வி உதவி தொகை - 2024-25 போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம் - கல்லூரிகள் பயிலும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கான இணைய வழியில் மாணவர் விண்ணப்பங்கள் பதிவு செய்தலுக்கான அறிவுரை வழங்குதல் - தொடர்பாக

******

2024-25 ஆம் ஆண்டிற்கான பழங்குடியின மாணாக்கர்களுக்கான போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகை இணையதளத்தில் பதிவு மேற்கொள்ள பின்வரும் அறிவுரைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. பழங்குடியின மாணாக்கர்களுக்கான போஸ்ட் மெட்ரிக்கல்வி உதவித்தொகை திட்டத்திற்கான இணையதளம் 23.01.2025 முதல் பதிவு செய்திட துவக்கம் செய்யப்பட்டுள்ளது,
2. 2024-25 ஆம் ஆண்டிற்கு (Renewal students) புதுப்பிக்கப்பட்ட மாணாக்கர்கள் விவரங்கள் கல்வி உதவித் தொகை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள் மாணாக்கர்களின் விவரங்களான பெயர், பாடப்பிரிவு, பயிலும் ஆண்டு, விடுதி விவரங்கள், விடுதி அல்லாத விவரங்கள், Management Quota, Government Quota போன்ற விவரங்களை சரிபார்த்து Approval கொடுத்த பின்னர் Editing செய்ய இயலாது. என்பதை கல்வி நிறுவனங்களுக்கு அறிவுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. 2024-25 ஆம் ஆண்டிற்கு (fresh students) புதியதாக விண்ணப்பிக்கும் மாணாக்கர்கள் இணையவழியில் பெறப்பட்ட சாதிச்சான்று, இணையவழியில் பெறப்பட்ட வருமான சான்றுடன் கல்வி உதவித்தொகை இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
4. இணையவழியில் சாதிச்சான்று பெறப்படாமல், சாதிச்சான்று அட்டையாக வைத்து இருக்கும் மாணாக்கர்கள் **UMIS - இல் Pdf ஆக பதிவேற்றம் செய்து Unified state scholarship Portal விண்ணப்பிக்க வேண்டும்.**
5. மாணாக்கர்களின் வங்கி கணக்கானது ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டு (seeding) செயல்பாட்டில் (Active) உள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் ஆதார் எண்ணை வங்கியுடன் இணைக்க (seeding) செய்திட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

6. ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளதா என்ற விவரத்தினை " MY Aadhar-UIDAI" என்ற இணையத்தில் உறுதி செய்து கொள்ளலாம்.ஆதார் எண்ணை வங்கியுடன் இணைக்காத மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்க வழங்க இயலாது.

7. தகுதியான மாணாக்கர்கள் எவரும் விடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்தவும்.

8. மாணவர் விண்ணப்பம் பதிவு செய்வதில் ஏதேனும் சிக்கல் இருந்தால் screenshot எடுத்து கல்வி உதவித்தொகை இணையதளத்தில் Grivance-இல் பதிவிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9. பழங்குடியின மாணாக்கர்கள் அரசு.அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழங்களில் பயிலும் மாணாக்கர்ககளுக்கு கல்வி உதவித் தொகை (seeding) ஆதார் எண்ணுடன் அவர்களின் வங்கிக்கணக்கு எண் இணைக்கப்பட்டிருக்கும் வங்கிகணக்கிற்கு வழங்கப்படுகின்றது.

10.சுயநிதி நிர்வாக கல்லூரிகளில் (Self financing college) பயிலும் பழங்குடியினர் மாணாக்கர்கள் சார்பான கல்விகட்டணம் (Course fee) கல்வி நிறுவனங்களின் வங்கிகணக்கிற்கு வழங்கப்படுகிறது. பராமரிப்புபடி (Maintenance allowance) seeding. செய்யப்பட்ட ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கிற்கு வழங்கப்படுகின்றது.

11. எனவே கட்டாயம் பழங்குடியின மாணாக்கர்கள் வங்கி கணக்குடன் ஆதார் எண் NPCI முறையில் இணைக்க அறிவுத்துமாறும், வங்கி கணக்கு இல்லாத மாணாக்கர்கள் உடனடியாக புதியதாக போஸ்ட் ஆபிஸ் கணக்கு துவங்க அறிவுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**12.2021-22, 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டு பழங்குடியினர் மாணாக்கர்களின் பராமரிப்புபடி (Maintenance allowance) வங்கி கணக்குடன் ஆதார் எண் NPCI முறையில் இணைக்ககாமல் உள்ளதால் பராமரிப்புபடி வழங்கமால் நிலுவையில் உள்ளது . எனவே மாணாக்கர்கள் வங்கி கணக்குடன் ஆதார் எண் NPCI) முறையில் கட்டாயம் இணைக்க அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

நகல்
கல்வி நிறுவனங்கள் தொடர்பு அதிகாரிகள்,
கல்வி நிறுவனங்கள்
அனைத்து மாவட்டங்கள்

Clvidyabai 29/1/25
பழங்குடியினர் நல இயக்குநருக்காக

அ.சி
29.01.2025